THE HINDU Dated 19.07.2024

# OPS, Vijayaprabhakaran and Nagendran file poll petitions

Expelled AIADMK leader O. Panneerselvam, BJP leader Nainar Nagendran and DMDK leader Vijayaprabhakaran have filed individual election petitions in the Madras High Court challenging the victory of their rival candidates in the Lok Sabha election held this year. All three petitioners had come to the High Court on Thursday since it is mandatory for the election petitioners to be present while filing the petitions. The High Court Registry would scrutinise the papers, number the cases if the papers are in order, and list them before the court concerned. While Mr. Panneerselvam, contesting as part of the National Democratic Alliance, lost to K. Navaskani of the Indian Union Muslim League in the Ramanathapuram constituency, Mr. Nagendran lost to Congress candidate Robert Bruce in Tirunelveli. Mr. Vijayaprabhakaran challenged the victory of B. Manickam Tagore of the Congress from Virudhunagar.

DECCAN CHRONICLE Dated 19.07.2024

# Sena-UBT can accept public donations: EC


**New Delhi:** The Election Commission on Thursday authorised the Shiv Sena (Uddhav Balasaheb Thackeray) to accept voluntary contributions from the public, days after it accepted a similar demand of the NCP(SP). In a communication issued on Thursday, the poll authority authorised the party to "accept any amount of contribution voluntarily offered to it by any person or company other than a government company" as per provisions of the Representation of the People Act which governs the contribution to all political parties. The party had requested the Election Commission to issue a communication or certificate recording the status of the party for the purpose of accepting contributions from the public. — *PTI*

THE HINDU - TAMIL
Dated : 19.07.2024

தேர்தலில் தங்களை வென்றவர்களை எதிர்த்து

# ஓபிஎஸ், நயினார் நாகேந்திரன், விஜயபிரபாகரன் வழக்கு

## ➤ உயர் நீதிமன்றத்தில் ஒரே நேரத்தில் ஆஜர்



↑ சென்னை உயர் நீதிமன்றத்துக்கு நேற்று வந்த ஓ.பன்னீர்செல்வம், நயினார் நாகேந்திரன், விஜயபிரபாகரன்.

● சென்னை

மக்களவைத் தேர்தலில் தங்களை வென்ற வேட்பாளர்களை எதிர்த்து ஓ.பன்னீர்செல்வம், நயினார் நாகேந்திரன், விஜய பிரபாகரன் ஆகியோர் சென்னை உயர் நீதிமன்றத்தில் நேற்று ஒரே நேரத்தில் ஆஜராகி தேர்தல் வழக்கு தொடர்ந்தனர்.

நடந்து முடிந்த மக்களவைத் தேர்தலில் ராமநாதபுரம் தொகுதியில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிட்ட முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வம், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் வேட்பாளர் நவாஸ் கனியிடம் 1.66 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தார்.

நெல்லை தொகுதியில் பாஜக சார்பில் போட்டியிட்டநயினார் நாகேந்திரன், காங்கிரஸ் வேட்பாளர் ராபர்ட் புரூஸிடம் 1.65 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் தோல்விடையந்தார்.

இதேபோல அதிமுக கூட்டணி சார்பில் விருதுநகரில் போட்டியிட்ட தேமுதிக வேட்பாளர் விஜய பிரபாகரன், காங்கிரஸ் வேட்பாளர் மாணிக்கம் தாகூரிடம் 4 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் களுக்குள் தேர்தல் வழக்குத் தொடர வேண்டும் என்ற நிலையில், ஓ.பன்னீர்செல்வம், நயினார் நாகேந்திரன், விஜய பிரபாகரன் ஆகியோர் நேற்று ஒரே நேரத்தில் அடுத்தடுத்து சென்னை உயர் நீதிமன்றத்துக்கு வந்து தேர்தல் வழக்குகளைத் தொடர்ந்துள்ளனர்.

ஓ.பன்னீர்செல்வம் தரப்பில் வழக்கறிஞர்கள் ராஜலட்சுமி, சுப்புரத்தினம், ஆர்.வி.பாபு, நாகேந்திரன் ஆகியோரும், நயினார் நாகேந்திரன் தரப்பில் வழக்கறிஞர் ஆர்.சி.பால்கனகராஜும், விஜய பிரபாகரன் தரப்பில் வழக்கறிஞர் வி.சந்தோஷ்குமாரும் ஆஜராகி

ஓபிஎஸ் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள தேர்தல் வழக்கில், நவாஸ் கனியின் வருமான வரி கணக்கு அறிக்கைக்கும், சொத்து விவரங்களுக்கும் இடையே குளறுபடிகள் உள்ளன. பல்வேறு விவரங்களை அவர் மறைத்துள்ளார். வாக்காளர்களுக்கு ரொக்கப்பணம் மற்றும் பரிசுப் பொருட்களை நவாஸ் கனி வழங்கியுள்ளார். எனவே அவர் வெற்றி பெற்றது செல்லாது என அறிவிக்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

இதேபோல நயினார் நாகேந்திரன் தாக்கல் செய்துள்ள மனுவில், நெல்லையில் நடைபெற்ற

புரூஸ் வெற்றி பெற்றது செல்லாது என அறிவிக்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

விஜய பிரபாகரன் தாக்கல் செய்துள்ள மனுவில், விருதுநகர் தொகுதியில் தபால் வாக்குகள் முதலில் எண்ணப்படவில்லை. வாக்கு வித்தியாசம் மாறி, மாறி முன்னிலை பெற்ற நிலையில் 4 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் தான் மாணிக்கம் தாகூர் வெற்றி பெற்றுள்ளார். எனவே தபால் வாக்குகளை மீண்டும் எண்ண வேண்டும். மாணிக்கம் தாகூர் வெற்றி பெற்றது செல்லாது என அறிவிக்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

இதற்கிடையே, உயர் நீதிமன்றத்தில், செய்தியாளர்களிடம் ஓபிஎஸ் கூறும்போது, 'எங்களை அதிமுகவில் இணைத்துக் கொள்ளும்படி பழனிசாமியிடம் யார் சொன்னது?. அவராகவே கேள்வி கேட்டுக்கொண்டு அவராகவே பதில் சொல்லி வருகிறார். அதிமுகவில் உள்ள அனைத்து மட்டத் தொண்டர்கள், தலைவர்களிடமும் பேசிக்கொண்டு தான் இரங்கிறேன். சசிகலாவின் பயணம்

DAILY THANTHI Dated: 19.07.2024



தேர்தல் வழக்கு தொடர்வதற்காக சென்னை ஐகோர்ட்டுக்கு ஓ.பன்னீர்செல்வம், நயினார் நாகேந்திரன், விஜய பிரபாகரன் ஆகியோர் வந்தபோது எடுத்த படம்

### நாடாளுமன்ற தேர்தல்:

# முஸ்லிம் லீக், காங்கிரஸ் வேட்பாளர்களின் வெற்றியை எதிர்த்து வழக்கு

## ஓ.பன்னீர்செல்வம், நயினார் நாகேந்திரன், விஜயபிரபாகரன் மனு தாக்கல்

சென்னை, ஜூலை.19-

ராமநாதபுரம், நெல்லை, விருதுநகர் நாடாளுமன்ற தொகுதியில் காங்கிரஸ் மற்றும் இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் வேட்பாளர்கள் வெற்றிப் பெற்றதை எதிர்த்து சென்னை ஐகோர்ட்டில் ஓ.பன்னீர்செல்வம், நயினார் நாகேந்திரன், விஜய பிரபாகரன் ஆகியோர் தனித்தனியாக தேர்தல் வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

**ஓ.பன்னீர்செல்வம் தோல்வி**

நாடாளுமன்றத் தேர்தல் கடந்த ஏப்ரல் மாதம் நடந்தது. இந்த தேர்தலில் ராமநாதபுரம் தொகுதியில் தி.மு.க., கூட்டணியில் போட்டியிட்ட இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் வேட்பாளர் நவாஸ் கனி 5 லட்சத்து 9 ஆயிரத்து 664 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார்.

சுயேச்சையாக போட்டியிட்ட முன்னாள் முதல்-அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம், 3 லட்சத்து 42 ஆயிரத்து 882 வாக்குகள் பெற்று தோல்வி அடைந்தார்.

இதேபோல, நெல்லை நாடாளுமன்றத் தொகுதியில், தி.மு.க., கூட்டணி சார்பில் காங்கிரஸ் கட்சி வேட்பாளர் ராபர்ட் புரூஸ், 5 லட்சத்து 2 ஆயிரத்து 296 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். பா.ஜ.க. சார்பில் போட்டியிட்ட நயினார் நாகேந்திரன் 3 லட்சத்து 36 ஆயிரத்து 676 வாக்குகள் மட்டும் பெற்று தோல்வி அடைந்தார்.

**காங்கிரஸ் வெற்றி**

விருதுநகர் தொகுதியில் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட மாணிக்கம் தாகூர், 3 லட்சத்து 85 ஆயிரத்து 256 ஓட்டுகள் பெற்று வெற்றிப் பெற்றார். இவரை எதிர்த்து போட்டியிட்ட தே.மு.தி.க. வேட்பாளர் விஜய பிரபாகரன், 3 லட்சத்து 80 ஆயிரத்து 877 வாக்குகள் பெற்று தோல்வி அடைந்தார். அதாவது 4 ஆயிரத்து 379 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தார்.

தேர்தலில் வெற்றிப் பெற்றவர்களுக்கு எதிராக தேர்தல் வழக்கு தொடரவேண்டும் என்றால், தேர்தல் முடிவு வெளியான நாளில் இருந்து 45 நாட்களுக்குள் தொடர வேண்டும். அதன்படி, தாங்கள் போட்டியிட்ட தொகுதியில் வெற்றி பெற்றவர்களுக்கு எதிராக சென்னை ஐகோர்ட்டில் ஓ.பன்னீர்செல்வம், நயினார் நாகேந்திரன், விஜய பிரபாகரன் ஆகியோர் தேர்தல் வழக்கை நேற்று தாக்கல் செய்தனர். இதற்காக இவர்கள் ஐகோர்ட்டுக்கு தனித்தனியாக வந்திருந்தனர்.

**தேர்தல் வழக்கு**

ஓ.பன்னீர்செல்வம் தரப்பில் வக்கீல்கள் ராஜலட்சுமி, சுப்புரத்தினம், ஏ.டி.நாகேந்திரன் ஆகியோரும், நயினார் நாகேந்திரன் தரப்பில் வக்கீல் ஆர்.சி.பால்கனகராஜும், விஜய பிரபாகரன் தரப்பில் வக்கில் ஜி.சந்தோஷ்குமாரும் ஆஜராகி தேர்தல் வழக்கை தாக்கல் செய்தனர்.

இந்த தேர்தல் வழக்கில் ஆளுங்கட்சி கூட்டணி கட்சி வேட்பாளர்கள் என்பதால், அரசு எந்திரங்கள் இவர்களுக்கு சாதகமாக செயல்பட்டன. வாக்காளர்களுக்கு பணம் பட்டுவாடா செய்யப்பட்டது என்பது உள்பட பல குற்றச்சாட்டுகளை சுமத்தியிருந்தனர்.

**வாழ்த்துகள்**

இதன்பின்னர் நிருபர்களுக்கு ஓ.பன்னீர்செல்வம் பேட்டி அளித்தார். அப்போது அவர், 'பிரிந்து கிடக்கும் அ.தி.மு.க., சக்திகள் அனைத்தும் ஒன்றிணைய வேண்டும் என கட்சியின் தொண்டர்கள் நினைக்கின்றனர். நாங்களும் அதைத்தான் கூறி வருகிறோம். அ.தி.மு.க., என்பது தொண்டர்களால் உருவாக்கப்பட்ட இயக்கமாகும். அப்படிப்பட்ட இயக்கம் பிரிந்து கிடப்பது ஜனநாயகத்துக்கு எதிரானது.

அ.தி.மு.க.வில் எங்களை இணைத்துக் கொள்ளும்படி எடப்பாடி பழனிசாமியிடம் யார் சொன்னது? அவராகவே கேள்வி கேட்டுக் கொண்டு அவராகவே பதில் சொல்லி வருகிறார். இந்த இயக்கத்தின் முடிவு இன்னும் சில காலத்தில் தெரியும். சசிகலாவின் பயணம் வெற்றிப் பெற வாழ்த்துகிறேன்' என்று கூறினார்.

DAILY THANTHI
Dated : 19.07.2024

முன்னாள் அமைச்சர் வைகைச்செல்வன் மீதான

## தேர்தல் வழக்கை ரத்து செய்ய ஐகோர்ட்டு மறுப்பு

சென்னை, ஜூலை.19-

தமிழ்நாடு சட்டசபைக்கு கடந்த 2021-ம் ஆண்டு தேர்தல் நடந்தது. அப்போது, விருதுநகரில் இரவு 10 மணிக்கு மேல் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டதாக அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் வைகைச்செல்வன் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். இந்த வழக்கைரத்து செய்யக்கோரி வைகைச்செல்வன் சார்பில் சென்னை ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு நீதிபதி ஜி.ஜெயச்சந்திரன் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் சார்பில் ஆஜரான வக்கீல் அய்யப்பராஜ், "அரசியல் பழிவாங்கும் நடவடிக்கையாக இந்த வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. 3 ஆண்டுகளாக வழக்கில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படவில்லை" என்று வாதிட்டார். போலீஸ் தரப்பில், "வழக்கின் விசாரணை முடிந்து சம்பந்தப்பட்ட கோர்ட்டில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு விட்டது" என்று விளக்கம் அளிக்கப்பட்டது.

இதையடுத்து குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு விட்டதால், மனுதாரர் மீதான 'தேர்தல் வழக்கை ரத்து செய்ய முடியாது" என்று உத்தரவிட்டு, மனுவை நீதிபதி தள்ளுபடி செய்தார்.

DINAMALAR Dated : 19.07.2024

## பன்னீர், நயினார், விஜயபிரபாகரன் ஐகோர்ட்டில் தேர்தல் வழக்கு

**சென்னை, ஜூலை 19-**

திருநெல்வேலி, விருதுநகர், ராமநாதபுரம் லோக்சபா தேர்தலில், வெற்றி பெற்றவர்களின் தேர்தலை எதிர்த்து, தோல்வியடைந்த வேட்பாளர்கள், சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து உள்ளனர்.

நடந்து முடிந்த லோக்சபா தேர்தலில் திருநெல்வேலி தொகுதியில், காங்கிரஸ் வேட்பாளர் ராபர்ட் புரூஸ்; விருதுநகர் தொகுதியில், காங்கிரஸ் வேட்பாளர் மாணிக்கம் தாகூர்; ராமநாதபுரம் தொகுதியில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் வேட்பாளர் நவாஸ் கனி ஆகியோர் வெற்றி பெற்றனர். மூவரும், தி.மு.க., கூட்டணியில் போட்டியிட்டனர்.

இவர்களின் வெற்றியை எதிர்த்து, பா.ஜ., வேட்பாளர் நயினார் நாகேந்திரன்; தே.மு.தி.க., வேட்பாளர் விஜய பிரபாகரன்; முன்னாள் முதல்வர் பன்னீர்செல்வம் ஆகியோர், உயர் நீதிமன்றத்தில் தேர்தல் வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

விருதுநகர் தேர்தலை எதிர்த்து, மதுரை மேற்கு மாவட்ட பா.ஜ., தலைவரும், விருதுநகர் தொகுதி வாக்காளருமான ஆர். சசிகுமார் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

தேர்தல் முடிவுகள் வெளியான தேதியில் இருந்து, 45 நாட்களுக்குள் தேர்தல் வழக்கு தாக்கல் செய்யப்பட வேண்டும்.

முன்னாள் முதல்வர் பன்னீர்செல்வம், நயினார் நாகேந்திரன், விஜயபிரபாகரன், ஆர்.சசிகுமார் ஆகியோர் நேற்று உயர் நீதிமன்றத்துக்கு நேரில் வந்து, தேர்தல் வழக்கை தாக்கல் செய்தனர்.